தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பொதுப்பணிகள் - அரசுப் பணி நியமனங்களில் இடஒதுக்கீடு - சுழற்சி முறைப் பட்டியல் மாற்றி அமைத்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன,

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசு ஆணை நிலை எண்,85
நாள்.6.மே.2000.

(திருவள்ளுவராண்டு 2031, விக்கிரம, சித்திரை 24)

படிக்கப்பட்டது:

அரசாணை நிலை எண்,280,பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள்.13.8.92.

ஆணை:

பொதுவிதி 22(ணீ)ல் நிர்ணயிக்கப்பட்ட 50 புள்ளி இடஒதுகீட்டு சுழற்சி முறைப்பட்டியலை மேலே படிக்கப்பட்ட அரசு ஆணையில் 100 புள்ளிகள் கொண்ட இடஒதுக்கீட்டு சுழற்சிமுறைப்பட்டியலாக மாற்றி ஆணைகள் வெளியிடப்பட்டன. அதன்படி முதல் 10 பணியிடங்களில் பொதுப் போட்டியிலே உள்ளவர்களுக்கு 4 இடங்கள் என்றும், ஆதிதிராவிடர்களுக்கு (Scheduled Castes) 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 1 இடம் என்றும் தற்பொழுது நியமனம் செய்யப்படுகிறது. இந்த முறையை மாற்றி பொதுப்போட்டியிலே உள்ளவர்களுக்கு 3 இடங்கள் என்றும், ஆதிதிராவிடர்களுக்கு (Scheduled Castes) 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 2 இடங்கள் என்றும், மாற்றியமைக்கும்படி அரசுக்கு கோரிக்கைகள் வந்தன, 9.3.2000 அன்று முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஆளுநரின் உரை மீதான விவாதத்திற்கு நன்றி தெரிவித்து பேசும் போது, இந்தக் கோரிக்கைகளை ஏற்று முதல் 10 இடங்களுக்கு சுழற்சி முறையை கணக்கிடும்பொழுது மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இதுவரை ஒரு இடம் என்றபதற்குப் பதிலாக இரண்டு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என்று தெரிவித்தார்கள்.

2, இதுகுறித்து அரசு கவனமாக பரிசீலித்து முதல் 10 தொகுப்பில் பொதுப்போட்டியிலே உள்ளவர்களுக்கு 3 இடங்கள் என்றும், ஆதிதிராவிடர்களுக்கு ( Scheduled Castes) 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 2 இடங்கள் என்றும், மற்ற 9 பத்துத் தொகுப்புகளில் பொதுப்போட்டியினர் மற்றும் இடஒதுக்கீட்டுப் பிரிவினர்களுக்கு அரசுப் பணி நியமங்களில் இடஒதுக்கீட்டு விழுக்காட்டிற்கு ஏற்ப சமமாக ஒதுக்கீடு செய்யவும் முடிவு செய்தது.

3, அதன்படி 100 புள்ளிகள் கொண்ட சுழற்சிமுறைப்பட்டியலை இவ்வாணையின் பிற்சேர்க்கையில் உள்வாறு மாற்றியமைத்து அரசு உத்திரவிடுகிறது.

4. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொதுவிதி 22-ன் கீழ் உள்ள அட்டவானை III, IIIA மற்றும் மிகூஷி ஆகியவற்றிக்கான விதித்திருத்தங்கள் தனியே வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலா பாலகிருஷ்ணன்
அரச செயலாளர்.

பெறுநர்

அனைத்து அரசுச் செயலர்கள், சென்னை-9,
அனைத்துத் துறைத்தலைவர்கள்
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை-104.
பதிவாளர், தமிழ்நாடு நிர்வாகச் தீர்ப்பாயம், சென்னை-104.

நகல்:

அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையிலுள்ள அனைத்துப் பிரிவுகள், சென்னை-9,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, சென்னை-9.

(பொதுவிதிகளுக்குத் திருத்தங்கள் வெளியிட)

ஆணைப்படி அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்.

பிற்சேர்க்கை

| | |
|---|---|
| முதல் தொகுப்பு | நான்காம் தொகுப்பு |
| 1,பொதுப்போட்டி | 31.பொதுப்போட்டி |
| 2,ஷெட்யூல்டு வகுப்பினர் | 32.ஷெட்யூல்டு வகுப்பினர் |
| 3,.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 33.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| 4.பிற்படுத்தப்பட்டோர் | 34.பிற்படுத்தப்பட்டோர் |
| 5.பொதுப்போட்டி | 35.பொதுப்போட்டி |
| 6.ஷெட்யூல்டு வகுப்பினர் | 36.ஷெட்யூல்டு வகுப்பினர் |
| 7.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 37.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| 8.பிற்படுத்தப்பட்டோர் | 38.பிற்படுத்தப்பட்டோர் |
| 9. பொதுப்போட்டி | 39. பொதுப்போட்டி |
| 10. பிற்படுத்தப்பட்டோர் | 40. பிற்படுத்தப்பட்டோர் |
| | |
| இரண்டாம் தொகுப்பு | ஐந்தாம் தொகுப்பு |
| 11,பொதுப்போட்டி | 41,பொதுப்போட்டி |
| 12,ஷெட்யூல்டு வகுப்பினர் | 42,ஷெட்யூல்டு வகுப்பினர் |
| 13,.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 43,.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| 14.பிற்படுத்தப்பட்டோர் | 44.பிற்படுத்தப்பட்டோர் |
| 15.பொதுப்போட்டி | 45.பொதுப்போட்டி |
| 16.ஷெட்யூல்டு வகுப்பினர் | 46.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| 17.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 47.பிற்படுத்தப்பட்டோர் |

| | |
|---|---|
| 18.பிற்படுத்தப்பட்டோர் | 48.பொதுப்போட்டி |
| 19. பொதுப்போட்டி | 49. பிற்படுத்தப்பட்டோர் |
| 20. பிற்படுத்தப்பட்டோர் | 50. பழங்குடியினர் |
| | |
| மூன்றாம் தொகுப்பு | ஆறாம் தொகுப்பு |
| 21,பொதுப்போட்டி | 51,பொதுப்போட்டி |
| 22,ஷெட்யூல்டு வகுப்பினர் | 52,ஷெட்யூல்டு வகுப்பினர் |
| 23,.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 53,.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| 24.பிற்படுத்தப்பட்டோர் | 54.பிற்படுத்தப்பட்டோர் |
| 25.பொதுப்போட்டி | 55.பொதுப்போட்டி |
| 26.ஷெட்யூல்டு வகுப்பினர் | 56.ஷெட்யூல்டு வகுப்பினர் |
| 27.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 57.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| 28.பிற்படுத்தப்பட்டோர் | 58.பிற்படுத்தப்பட்டோர் |
| 29. பொதுப்போட்டி | 59. பொதுப்போட்டி |
| 30. பிற்படுத்தப்பட்டோர் | 60. பிற்படுத்தப்பட்டோர் |
| | |
| ஏழாம் தொகுப்பு | ஒன்பதாம் தொகுப்பு |
| 61,பொதுப்போட்டி | 81.பொதுப்போட்டி |
| 62,ஷெட்யூல்டு வகுப்பினர் | 82,ஷெட்யூல்டு வகுப்பினர் |
| 63,.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 83,.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| 64.பிற்படுத்தப்பட்டோர் | 84.பிற்படுத்தப்பட்டோர் |
| 65.பொதுப்போட்டி | 85.பொதுப்போட்டி |
| 66.ஷெட்யூல்டு வகுப்பினர் | 86.ஷெட்யூல்டு வகுப்பினர் |
| 67.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 87.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| 68.பிற்படுத்தப்பட்டோர் | 88.பிற்படுத்தப்பட்டோர் |
| 69. பொதுப்போட்டி | 89. பொதுப்போட்டி |
| 70. பிற்படுத்தப்பட்டோர் | 90. பிற்படுத்தப்பட்டோர் |
| | |
| எட்டாம் தொகுப்பு | பத்தாம் தொகுப்ப |
| 71,பொதுப்போட்டி | 91,பொதுப்போட்டி |
| 72,ஷெட்யூல்டு வகுப்பினர் | 92,ஷெட்யூல்டு வகுப்பினர் |
| 73,.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 93,.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| 74.பிற்படுத்தப்பட்டோர் | 94.பிற்படுத்தப்பட்டோர் |
| 75.பொதுப்போட்டி | 95.பொதுப்போட்டி |
| 76.ஷெட்யூல்டு வகுப்பினர் | 96.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
| 77.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 97.பிற்படுத்தப்பட்டோர் |
| 78.பிற்படுத்தப்பட்டோர் | 98.பொதுப்போட்டி |
| 79. பொதுப்போட்டி | 99. பிற்படுத்தப்பட்டோர் |
| 80. பிற்படுத்தப்பட்டோர் | 100. பொதுப்போட்டி |

ஷீலா பாலகிருஷ்ணன்

அரசு செயலர்,

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.